# பெரியாழ்வார் திருமொழி 1-9
## வட்டுநடுவே
(தன் முதுகைக் கட்டிக் கொள்ளும்படி கண்ணனை அழைத்தல்)

108 * வட்டுநடுவே * வளர்கின்ற * மாணிக்க
மொட்டு நுனையில் * முளைக்கின்ற முத்தே போல் **
சொட்டுச் சொட்டென்னத் * துளிக்கத் துளிக்க * என்
குட்டன் வந்து என்னைப் புறம் புல்குவான் * கோவிந்தன்
என்னைப் புறம் புல்குவான் (1)

109 கிங்கிணி கட்டிக் * கிறி கட்டி * கையினில்
கங்கணமிட்டுக் * கழுத்தில் தொடர் கட்டி **
தன் கணத்தாலே * சதிரா நடந்து வந்து *
என் கண்ணன் என்னைப் புறம் புல்குவான் * எம்பிரான்
என்னைப் புறம் புல்குவான் (2)

110 கத்தக்கதித்துக் * கிடந்த பெருஞ்செல்வம் *
ஒத்துப் பொருந்திக் கொண்டு * உண்ணாது மண்ணாள்வான் **
கொத்துத் தலைவன் * குடிகெடத் தோன்றிய *
அத்தன் வந்து என்னைப் புறம் புல்குவான் * ஆயர்கள்
ஏறு என்புறம் புல்குவான் (3)

111 நாந்தகம் ஏந்திய * நம்பி சரணென்று *
தாழ்ந்த தனஞ்சயற்காகி * தரணியில் **
வேந்தர்களுட்க * விசயன் மணித் திண்தேர் *
ஊர்ந்தவன் என்னைப் புறம் புல்குவான் * உம்பர்கோன்
என்னைப் புறம் புல்குவான் (4)

112 வெண்கலப் பத்திரம் * கட்டி விளையாடி *
கண்பல செய்த * கருந்தழைக் காவின் கீழ் **
பண்பல பாடிப் * பல்லாண்டிசைப்ப * பண்டு
மண்பல கொண்டான் புறம் புல்குவான் * வாமனன்
என்னைப் புறம் புல்குவான் (5)

113 சத்திரமேந்தித் * தனியொரு மாணியாய் *
உத்தர வேதியில் * நின்ற ஒருவனை **
கத்திரியர் காணக் * காணி முற்றும் கொண்ட *
பத்திராகாரன் புறம் புல்குவான் * பாரளந்தான் என்புறம்
புல்குவான் (6)

114 பொத்தவுரலைக் கவிழ்த்து * அதன் மேலேறி *
தித்தித்த பாலும் * தடாவினில் வெண்ணெயும் **
மெத்தத் திருவயிறு * ஆர விழுங்கிய *
அத்தன் வந்து என்னைப் புறம் புல்குவான் * ஆழியான்
என்னைப் புறம் புல்குவான் (7)

115 மூத்தவை காண * முதுமணற் குன்றேறி *
கூத்து உவந்தாடிக் * குழலால் இசை பாடி **
வாய்த்த மறையோர் வணங்க * இமையவர்
ஏத்த வந்து என்னைப் புறம் புல்குவான் * எம்பிரான்
என்னைப் புறம் புல்குவான் (8)

116 கற்பகக் காவு * கருதிய காதலிக்கு *
இப்பொழுது ஈவனென்று * இந்திரன் காவினில் **
நிற்பன செய்து * நிலாத் திகழ் முற்றத்துள் *
உய்த்தவன் என்னைப் புறம் புல்குவான் * உம்பர்கோன்
என்னைப் புறம் புல்குவான் (9)

117 ***** ஆய்ச்சியன்றாழிப் பிரான் * புறம் புல்கிய *
வேய்த்தடந்தோளி சொல் * விட்டுசித்தன் மகிழ்ந்து **
ஈத்த தமிழிவை * ஈரைந்தும் வல்லவர் *
வாய்த்த நன்மக்களைப் பெற்று * மகிழ்வரே (10)